

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மாநில ஆதிதிராவிடர் நலக்குழு மற்றும் சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மத்திய மண்டலம் சார்பாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா முன்னிட்டு மாபெரும் பட்டிமன்ற போட்டி விழுப்புரம் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு அணிச் செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி எம்.எல். ஏ தலைமையில் நடைபெற்றது. உயர்கல்வி துறை அமைச்சர் க.பொன்முடி சிறப்புரையாற்றி பட்டி மன்றத்தை துவக்கி வைத்தார். மாநில ஆதிதிராவிடர் நலக்குழு அணி இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ் வரவேற்புரையாற்றினார். விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் மருதூர் இராமலிங்கம், வி.பி.இராசன் திப்பம்பட்டி ஆறுச்சாமி மாரியப்பன் கென்னடி துரைசாமி, இராஜேந்திரன், விழுப்புரம் தெற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் தலைவர் வேலு ஜி. அமைப்பாளர் செல்வ பிரேம், துணைத் தலைவர் இருசப்பன், துணை அமைப்பாளர்கள் திராவிட மணி, தர்மலிங்கம், ராஜீவ் காந்தி, சூப்பர் பழனி, ஓம் சிவ சக்திவேல், ஏழுமலை, மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் டி.என். ஏ.தமீன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். பட்டி மன்றத்திற்கு நடுவராக திண்டுக்கல் ஐ. லியோனி, பேச்சாளர்களாக கவிஞர் இனியவன், பேராசிரியர் விஜயகுமார், திருமதி நாக நந்தினி, தணிகைவேலன் ஆகியோர் விவாத உரையாற்றினார்கள். கழக துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ், சிறுபான்மை நலத்துறை அமைச்சர் கே.எஸ்.மஸ்தான், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் , தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன், வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன், விழுப்புரம் தெற்கு மாவட்ட நிர்வாகிகள் மாவட்டப் பொருளாளர் விழுப்புரம் ஜனகராஜ், துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், தயா.இளந்திரையன், இரா.கற்பகம், மகளிர் அணி பிரச்சார குழுச் செயலாளர் எம். தேன்மொழி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ஆயிரம் விளக்கில் மருத்துவ முகாம்!

சென்னை, அக்.4 - கழக தலைவர் தளபதி, கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் ஆணைக்கிணங்க மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, மாவட்டச்செயலாளர் நே.சிற்றரசு ஆகியோரின் ஆலோசனைப்படி பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் சிறப்பு மருத்துவ முகாம் ஆயிரம் விளக்கு கிழக்குபகுதி 113வது வட்டத்தில் திரு மதி.பிரேமா சுரேஸ் எம்.சி. தலைமையில் இராமாதெரு மற்றும் மேட்டுபாடி தெரு சந்திப்பில் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது.

இதில் மருத்துவர்கள், செவிலியர்கள் உதவியாளர் களுடன் நடைபெற்ற இந்த மருத்துவ முகாமில் பொது மக்கள் ஆர்வமுடன் கலந்துகொண்டு பரிசோதனை செய்து அதற்கு தேவையான மருந்து மாத்திரைகள் பெற்று பயன் அடைந்தார்கள்.





கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் சட்டமன்ற தொகுதி மற்றும் தெற்கு மாவட்ட பொறியாளர் அணி சார்பில் மாநிலம் தழுவிய மாபெரும் பேச்சுப்போட்டி அரசம் பட்டி சண்முகநாதன் பொறியியல் கல்லூரியில் மாவட்ட அமைப்பாளர் கே.ஆர்.ராமசாமி வரவேற்புரையில் நடைபெற்ற பேச்சுப்போட்டியை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்து சிறப்புரை யாற்றினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிச்சுடர் கவிதை பித்தன், திருமயம் தெற்கு ஒன்றிய செயலாளர் ஆறு. அழகு (எ) சிதம்பரம், வடக்கு ஒன்றியச் செயலாளர் ஆர்.கணேசன், ஊராட்சி அரிமளம் ஒன்றிய குழு தலைவர் எம்.மேகலா முத்து, தேவி, பொன்.பாரிவள்ளல் பொறியாளர் அணி துணை அமைப்பாளர்கள் தேவ சூர்யா, அண்ணாதுரை, வைத்தியலிங்கம், ஆனந்தகுமார், அன்பரசன், சரவணன், ராகுல் மற்றும் ஏராளமான மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

### திருவொற்றியூரில்

## பள்ளி மாணவ-மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

### கழக மீனவர் அணி துணைத்தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. வழங்கினார்!

திருவொற்றியூர், அக்.4 - திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அரசு உதவி பெறும் தூய பவுல் மகாஜன மேல்நிலைப் பள்ளி மற்றும் ஸ்ரீ வி.ராமகிருஷ்ணா மேல்நிலைப்பள்ளியில் பயிலும் பதினொன்றாம் வகுப்பு மாணவ-மாணவியருக்கு திராவிட மாடல் முதல்வர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநில இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழிக்காட்டுதலின்படி தமிழ்நாடு அரசின் விலை இல்லா மிதிவண்டியை 48 மாணவர்களுக்கும், 44 கழக மாநில மீனவர் அணி துணை தலைவர் திருவெற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் வழங்கினார்.

திருவொற்றியூர் தூய பவுல் மகாஜன மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பள்ளியின் தாளாளர் அருட்தந்தை ராக் சின்னப்பா பள்ளியின் தலைமை ஆசிரியர் மார்ட்டின் சகாயராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அதனைத் தொடர்ந்து வடக்கு ரயில்வே சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ வி.ராமகிருஷ்ணா மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 33 மாணவ - மாணவியர்களுக்கும் தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டியை வழங்கி கல்வியின் அவசியத்தையும், மாணவர்கள் ஒழுக்கமாக கல்வி பயில வேண்டும் என பல அறிவுரைகளையும் கூறினார்.

இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினரும், ஜெயகோபால் கரடியா அரசு மேல்நிலைப் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவருமான வி.இராம நாதன், மாமன்ற உறுப்பினர்கள் கவி.கணேசன், கே.பி.சொக்கலிங்கம் பானுமதி சந்தர், மத்திய பகுதி பொருளாளர் எம்.எஸ்.நாகலிங்கம், மு.பகுதி துணை செயலாளர் இ. ரமேஷ், வட்ட கழக செயலாளர் ஏகா.கார்த்திகேயன், மாவட்ட பிரதிநிதிகள் கே.கார்த்திகேயன், பி.எஸ். சைலஸ், எத்திராஜ், சந்தான கிருஷ்ணன்,

மாவட்ட அயலக அணி தலைவர் எஸ்.டி.சங்கர், சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் பாலஉமாபதி, மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் பிரிட் சுரேஷ், தனசேகர், பகுதி பிரதிநிதி வாழப்பாடி செந்தில், பகுதி மீனவரணி அமைப்பாளர் எஸ்.செல்வம், எஸ்.கே. இளங்கோ, எம்.எல்.வேலன், ஆர்.குமரன், கே.எஸ்.ஆனந்தன், கருணாநிதி, பரணி குமார், முத்துராஜ், வி.ஏ.டி. செந்தில், இளைஞரணி கார்த்திக், ராஜா, குமார், நன் நாகராஜ், திருவொற்றியூல் மேற்கு பகுதி தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் அ.நிர்மல் தாஸ் மற்றும் மாவட்ட கழக, பகுதி கழக, வட்ட கழக தோழர்கள் மாணவர்கள் ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

### புதுக்கோட்டை மாவட்டம்

## திருவரங்குளம் ஊராட்சியில் மாணவ - மாணவிகளுக்கு மிதிவண்டிகள்!

### அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்!

புதுக்கோட்டை, அக். 4 - புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 27.09.2023 அன்று பல்வேறு பணிகளை துவக்கி வைத்து, மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி களை வழங்கினார்.

பின்னர் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் கிராமப்புற பகுதிகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் இன்றையதினம் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பல்வேறு பணிகள் துவக்கி வைக்கப் பட்டது.

அதன்படி, திருவ ரங்குளம் ஊராட்சி ஒன்றியம், கத்தக்குறிச்சி, வாண்டாக் கோட்டை மற்றும் வல்லத்திராக்கோட்டை பகுதிகளில் புதிய மின்மாற்றிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இப்பகுதிகளில் உள்ள குறைந்த மின்அழுத்தம் சரிசெய்யப்பட்டு, வீட்டு மின்சாரம், விவசாயத்திற்குத் தேவையான மின்சாரம் உள்ளிட்டவைகள் பூர்த்தி செய்யப் பட்டுள்ளது. மேலும் வல்லத்திராக்கோட்டையில் பெரமர் திரௌபதி யம்மன் கோவில் முன் மண்டபம் மராமத்து பணியும் இன்றையதினம் துவக்கி வைக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, வல்லத்திராக்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளியைச் சேர்ந்த 65 மாணவர்களுக்கும், 86 மாணவிகளுக்கும் மற்றும் வேங்கிடகுளம் தூய வளனார் மேல்நிலைப்பள்ளியைச் சேர்ந்த 78 மாணவர்களுக்கும், 71 மாணவிகளுக்கும் என மொத்தம் 300 மாணவ, மாணவிகளுக்கு ரூ.14,48,020 மதிப்பிலான விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டது. இம்மாணவ, மாணவிகள் நாள்தோறும் பள்ளிக்கு மிதிவண்டிகளை பயன்படுத்துவதன் மூலம் தங்களுக்கான உடற்பயிற்சியாக அமைவதுடன், சரியான நேரத்திற்கு பள்ளிக்கு சென்று வர முடியும்.

மேலும் பள்ளித்திவிடுதி ஊராட்சியில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.39 லட்சம் மதிப்பிலான பணிகள் அடிக்கல்நாட்டி துவக்கி வைக்கப்பட்டது. இதன்மூலம் இப்பகுதி பொதுமக்களின் அடிப்படை தேவைகள் பூர்த்தி அடைவதுடன், வளர்ச்சி ஏற்படுவதற்கு வாய்ப்பாக அமையும். மேலும் சேந்தன்குடி பகுதியில் பகுதி நேர கால்நடை மருத்துவமனை திறந்து வைக்கப்பட்டது. இப்பகுதி கால்நடை வளர்ப்போர் தங்களது கால்நடைகளுக்கான மருத்துவ வசதியினை வீடுகளுக்கு அருகாமையிலேயே பெற்றுக்கொள்ள முடியும். மேலும் கால்நடைகளுக்கான மருத்துவ சேவையினை பெற்று, நோயில்லாமல் கால்நடைகளை வளர்த்து பயன்பெறலாம். எனவே பொதுமக்கள், மாணவ, மாணவிகள் அனைவரும் தமிழக அரசால் செயல்படுத்தப்படும் இதுபோன்ற பல்வேறு நலத்திட்டங்களை உரிய முறையில் பெற்று முன்னேற்றம் அடைய வேண்டும் என சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட கல்வி அலுவலர் (அறந்தாங்கி) ராஜேஸ்வரி, திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் வள்ளியம்மை தங்கமணி, வட்டாட்சியர்தி விஸ்வநாதன், வட்டார வளர்ச்சி அலுவலர் ஆயிஷாராணி, அரு. வடிவேல், உஷா செல்வம், தலைமையாசிரியர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



பெரம்பலூர் மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை ஆலோசனைக் கூட்டம், மாவட்டக் கழக அலுவலகத்தில், மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் முன்னிலையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில், மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் கே.எம்.ஏ.சுந்தரராசு, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.ஆர்.சிவசங்கர், கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் முத்தரசன், கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாவட்ட துணை தலைவர் ரமேஷ், கலை இலக்கிய பேரவை மாவட்ட துணை அமைப்பாளர்கள் ந.முத்துசெல்வம்,பூபதி, சின்னதுரை, தென்றல் ரவி, கணேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### குவைத் தளபதி பேரவை சார்பில்

## கழக முப்பெரும் விழா - விருதுகள் வழங்கல்!

### மருத்துவர் சாந்தமூர்த்தி - சரவணன் - காளிதாசன் பங்கேற்பு!

குவைத், அக். 4- அயலக திராவிட முன்னேற்ற கழகம், குவைத் தளபதி பேரவை சார்பில் கழகத்தின் முப்பெரும் விழா, முருகாப் பாலிவுட் உணவகத்தில் கழகத்தின் மூத்த உடன்பிறப்புகளுக்கும், சிறந்த சமூக சேவகருக்கும், சிறந்த மருத்துவ சேவைக்கான விருதும் வழங்கப்பட்ட திருவாளர்கள் முகமது ஹக்கீம், கடியாவயல் கருப்பையா, பழனி நல்லரசு, சரவணராஜ், குடந்தை முகமது ரபிக், வேணாடு பெர்வின் சுதர், தமிழ் மக்கள் சேவை மையம் அலி பாய், டேவிட் திவாகர் ஆகியோருக்கு விருதுகள் வழங்கி சிறப்பிக்கப் பட்டது.

நிகழ்வில் தலைமை அவைத் தலைவர் மருத்துவர் சாந்த மூர்த்தி, ஒருங்கிணைப்பாளர் பட்டுக்கோட்டை சரவணன் ஒருங்கிணைப்பில் முன்னிலை துணைப் பொருளாளர் காளிதாசன், தொண்டரணி, தொழிலாளர் அணி செயலாளர்புல்லட் ராமதாஸ், ஆறாம் பண்ணை ஷேக், மண்டலம் மதிவாணன், உ.கு. சிவக்குமார், கடியா வயல் கருப்பையா, ஷேக் கான் நபீஸ், மதிமுக மணி வாசகம், சமூக ஆர்வலர் முகமது, உதயநிதி ரசிகர் மன்றம் ஈரோடு முஸ்தபா, கூட்டணி கட்சி நிர்வாகிகள் ம.தி.மு.க., இந்திய தேசிய காங்கிரஸ், வி.சி.க., மா.ஜா.க., சி.பி.எம்., சி.பி.ஐ., தமிழ் மக்கள் சேவை மையம் நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள், நிர்வாகிகள் நூற்றுக்கும் மேற்பட்ட உடன்பிறப்புகள் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர்.

நன்றி உரை காசி ராமலிங்கம் வருகை தந்த அனைவருக்கும் உணவு உபசரிப்புடன் விழா இனிதே நிறைவுற்றது.



சேலம் மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழாவையொட்டி மாவட்ட அளவிலான கைப்பந்து போட்டியை மாவட்ட கழகச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். உடன் மாநகரச் செயலாளர் பா.ரகுபதி, கோட்டச் செயலாளர்கள் கே.என்.சிவக்குமார். ஜெயசீலன், மாவட்ட விளையாட்டு அணி நிர்வாகிகள் அன்புக்கரசு, மருது பிள்ளை, மாமன்ற உறுப்பினர்கள் சங்கீதா நீதிவர்மன், கிரிஜா குமேரேசன் ஆகியோர் இருந்தனர்.



சூலூர் மாவட்ட கழக அலுவலகத்தில் கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் கோவை தெற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நல குழு கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநில இணைச்செயலாளர் திப்பம்பட்டி ஆறுச்சாமி, மாவட்ட அமைப்பாளர் ஞானசேகரன், துணை அமைப்பாளர்கள் வால்பாறை ரவிச்சந்திரன், சுல்தான்பேட்டை மணி, மோகன், பொள்ளாச்சி பஞ்சலிங்கம், மதுக்கரை அருள்ராஜ் உள்பட மலர் கலந்து கொண்டனர்,

## ஆண்டிபட்டி அருகே சாலையில் குளம்போல் தேங்கிய மழைநீர்!

### கிராம மக்களின் கோரிக்கை ஏற்று மகாராசன் எம்.எல்.ஏ நடவடிக்கை!

தேனி, அக். 4 - ஆண்டிபட்டி அருகே நாச்சியார்புரம் கிராமத்தில் சாலையில் மழைநீர் குளம் போல் தேங்கியதால் கிராம மக்கள் அவதியடைந்து வந்தனர். இது குறித்து ஆண்டிபட்டி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் மகாராசனிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. உடனடியாக மழைநீர் தேங்காத வகையில் சாலையை உயர்த்தி அமைக்கும் பணி தொடங்கப்பட்டு அளவீடு செய்யும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி அருகே உள்ள நாச்சியார்புரம் கிராமத்தில் சுமார் 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். தேனி மதுரை நெடுஞ்சாலையையும், ஆண்டிபட்டி வைகை அணை சாலையையும் இணைக்கும் பகுதியில் இந்த நாச்சியார்புரம் கிராமம் அமைந்துள்ளது. இணைப்பு சாலையில் ரெங்கநாதபுரம், நாச்சியார்புரம், ரெங்கசமுத்திரம், ஜம்புலிபுத்தூர் உள்ளிட்ட கிராமங்கள் உள்ளன. இந்த கிராமங்களைச் சேர்ந்த மக்கள் நாச்சியார்புரம் சாலையை தான் பயன்படுத்தி வருகின்றனர். இந்த நாச்சியார்புரம் கிராமத்தில் இருந்து ரெங்கநாதபுரம் கிராமம் செல்லும் பகுதி வரை சுமார் ஒரு கிலோமீட்டர் தொலைவில் தாழ்வான சாலையாக உள்ளது. இதனால் மழைக்காலங்களில் மழை நீர் அதிகப்படியாக தேங்கி கிராம மக்கள் அவதி அடைந்து வந்தனர். அதிகமான மழை நீர் தேங்கி நிற்பதால் அந்த மழைநீர் வற்றும் வரை பொதுமக்கள் அந்த சாலையை பயன்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. ஆண்டுதோறும் மழை பெய்யும் போதெல்லாம் இந்த நிலை ஏற்பட்டு வருவதால், பொதுமக்கள் மிகவும் பாதிப்படைந்தனர்.

இந்த சாலையை உயர்த்தி அமைக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் பல ஆண்டுகளாக கோரிக்கை வைத்து வந்தனர்.

இதுகுறித்து ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் எம் எல் ஏ நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலுவிடம் நேரில்சந்தித்து கோரிக்கை வைத்ததின் அடிப்படையில், ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.1 கோடி 70 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டு அதற்கான பணிகள் தற்போது நடைபெற தொடங்கியுள்ளது. சாலை பணிகளில் முதற்கட்டமாக ஆண்டிபட்டி நெடுஞ்சாலை துறை அதிகாரிகள் இடத்தை அளவீடு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஆண்டிபட்டி நெடுஞ்சாலைத் துறை உதவி கோட்டப் பொறியாளர் திருக்குமரன் தலைமையில் அதிகாரிகள் சாலையை எவ்வளவு தூரத்திற்கு உயர்த்த வேண்டும், அங்கு பாலம் அமைக்கும் இடம், சாலை ஓரத்தில் அமைந்திருக்கும் கிணறுகளுக்கு விபத்துக்கள் ஏற்படாத வகையில் தடுப்புகள் அமைப்பது குறித்து அளவீடு செய்து ஆய்வு செய்தனர். மேலும் இந்த சாலை ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கும், அதில் மழைநீர் வெளியேற்ற ஒரு பாலம், பள்ளிகளுக்கு அருகில் பேவர் பிளாக் கற்கள், சாலை ஓரத்தில் அமைந்துள்ள கிணற்று பாதுகாப்பு தடுப்பு சுவர்களும் அமைக்கப்பட உள்ளது. இதில் உதவி பொறியாளர் முருகேஸ்வரன் மற்றும் சாலை ஆய்வாளர்கள் சாலை பணியாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வீரபாண்டி ஆ. இராஜா

### அக்டோபர் 2 (2021)



தனது இளமைப் பருவத்திலேயே தனது தந்தையாகிய வீரபாண்டியாரின் வழியில் கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்டச் செயலாளர், தேர்தல் பணிக்குழுச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

வீரபாண்டி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்கள் அனைத்தையும் முன்னெடுத்து நடத்தியதோடு, அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “சேலம் மண்டலத்தில் கழகம் வளர்க்கும் வீரனாக வலம் வந்த தம்பி வீரபாண்டி ராஜா” என்று தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.